# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.57/2020

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 02–03–2026.

பெயர் = மோகன்

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) கோவிந்தராஜ், வெங்கட்ராமன் ஆகியோர்களுக்கும் எனக்கும் நெருங்கிய உறவு என்றால் சரிதான். வாதிகள் எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் 107/215C என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் வடக்கே பிரதிவாதியின் இடம், தெற்கே கோவிந்தராஜ் வீடு, மேற்கே தென்வடல் வீதி, கிழக்கே அரசாங்கத்திற்கு பாத்தியமான சந்து என சாட்சி கூறுகிறார். வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் பாதை பாத்தியம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். ஊர்மக்கள் எல்லாரும் செல்லக்கூடிய பொதுப்பாதை என பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர். தாவாச்சொத்து கிழமேல் 65 அடி தென்வடல் 6 அடி. தாவாச்சொத்து பொதுப்பாதை எனில் அரசாங்க ஆவணங்களில் பொதுப்பாதை என காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதனடிப்படையில் வாதிகள் பொதுப்பாதை என உரிமைகோருகிறார்கள் என்றால் 1941 திருமங்கலம் சார்பதிவக ஆவண எண்.2669 ன்படி தபசில் சொத்தில் 2,3 லக்கச்சொத்துக்களிடையே பாதை இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என சாட்சி கூறுகிறார்.

(2) மேற்படி ஆவண விவரத்தை யார் சொன்னார்கள் என்றால் அந்த ஆவணம் குறிப்பிட்டுதான் நான் சொத்து வாங்கியுள்ளேன் என சாட்சி கூறுகிறார். மேற்படி விவரத்தை என் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து எங்களின் இடத்திற்கும், வாதிகளின் இடத்திற்கும் இடையே உள்ள பொதுப்பாதை என நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். வாதிகள் என்னை தரப்பினர்களாக சேர்க்கவில்லை நானும் தரப்பினராக சேர்க்க மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் உள்ள கண்ணன் என்

தந்தை, எல்லம்மாள் என் தாயார். வா.சா.ஆ.12 ல் வகைப்பாடு ரயத்துவாரி மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரயத்துவாரி மனை என்றால் என்னவென எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.12 பட்டா சொத்தில் என் வீடு உள்ளது. தாவாச்சொத்து ஆதியில் நம்மாழ்வார்நாயக்கருக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை பிரதிவாதிக்கு உயில்மூலம் பாத்தியப்படுத்திக்கொடுத்து அதில் அவர் வீடும் கட்டிவிட்டார் என்றால் சரியல்ல.

(3) நம்மாழ்வார் நாயக்கர் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த உயிலை எப்போது பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை ஆனால் பார்த்துள்ளேன். தேதி, வருடம் தெரியாது, யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றவிவரம் தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி வீட்டிற்கும் வடக்கே உள்ள சொத்தை நம்மாழ்வார்நாயக்கர் பிரதிவாதியின் சகோதரர் ஆதிநாராயணன் மூலம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த இடத்திற்கு போகவர தாவாச்சொத்தை நம்மாழ்வார் நாயக்கரிடமிருந்து பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கும் வடக்கே, கிழக்கே உள்ள இடம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. சாட்சி சொல்வதற்கு யார் அழைத்துவந்தார்கள் என்றால் நானாக தான் வந்தேன். யாரும் கூட்டிவரவில்லை நானாக வாதிகளின் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றேன். நிரூபணவாக்குமூலத்திற்கு விவரங்கள் நான் சொல்ல சொல்லதான் டைப் செய்தார்கள். நிரூபணவாக்குமூலத்தில் பிரதிவாதி தாவா இடத்திற்கும் தெற்கே உள்ள புறம்போக்கு இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார் என சொல்லியுள்ளதற்கு புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

(4) சர்வே எண்.107/215C பாதை என சொல்லியுள்ளேன் பின்னர் எவ்வாறு என் தாயார் பெயரில் பட்டா கொடுத்தார்கள் என்றால் மொத்தம் 195 ச.மீ அதில் 120 ச.மீ எங்களுக்கு பாத்தியமானது. அதில் அழகர்சாமி, கோவிந்தராஜ் ஆகியோர் இடம்போக மீதம் யாருக்கு பாத்தியம் என தெரியவில்லை. வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 29.07.1979 ம் தேதியிட்ட பாக உடன்படிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய இடத்திற்கும், வாதிகளின் இடத்திற்கும் செல்வதற்கு தாவாச்சொத்து தேவைப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் என்னை தரப்பினராக சேர்க்க வாதிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்து வாதிகளுக்கும், எனக்கும் அனுபவமோ பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல.

தாவாச்சொத்து பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டு அனுபவத்தில் உள்ள சொத்து என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S